[14th December 1961

Per capita income

* 2355 P. *Q.*—SRI T. S. RAMASUAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state the achievements during the Second Five-Year Plan in regard to per-capita income increase during the plan?

THE HON. SRI C. SUBRAMANIAM : The per-capita income for 1960–61 has been reckoned at Rs. 330 as against the level of income of Rs. 306 at the beginning of the Second Plan.

Industries for North Arcot district

*** 2355-V. *Q.*—SRI S. M. ANNAMALAI :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் எந்தெந்த தொழில்கள் ஆரம்பிக்கலாமென்று (The Economic Investigation Scheme) சர்வே செய்தார்கள்?

(இ) அதனுடைய அறிக்கை மேஜைமீது வைக்கப்படுமா?

(உ) அந்த அறிக்கையில் வடாற்காடு மாவட்டம் தொழில் துறையில் பின் தங்கியிருக்கிறதென்று கூறியிருப்பதைப் போக்க சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) The attention of the hon. Member is invited to the answer given on 29th March 1961 to the Starred Question No. 1176.

( ) A copy of the Small-scale Industry Area Survey Report on North Arcot district[a] is placed on the table of the House.

(உ) The action taken by the Government in this regard has been indicated in the answer given on 9th December 1961 to Starred Question No. 2204 put by the same Member.

SRI S. M. ANNAMALAI : ஸார், முதலாவது, இரண்டாவது திட்டங்களிலே வட ஆர்க்காடு மாவட்டத்தில் தொழில்களை ஏற்படுத்த சரிவர கவனம் செலுத்தாமல் இருந்ததால், அந்த மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. ஆகவே, இந்த மூன்றாவது திட்டத்திலாவது, அங்கே தனியார் துறையில் தொழில்களை எடுத்து நடத்த பெரும் பணக்காரர்கள் யாரும் கிடையாது என்பதனால், சர்க்காரே அந்த மாவட்டத்திற்கென்று தனித் திட்டம் தீட்டி, தொழில் துறையில் அந்த மாவட்டம் முன்னேற தனிக்கவனம் செலுத்துவார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : சர்க்கார் தொழில்களை தாங்களே ஆரம்பிப்பது இல்லை. தனியார் தொழில்களை ஆரம்பிக்க முன் வந்தால், வேண்டிய உதவிகளும், சலுகைகளும் கொடுக்கப்படும். வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஒருவரும் வர மாட்டேன் என்கிறார்கள். இப்பொழுது பணம் தேவை இல்லை. இன்றைக்கு வேண்டியது தொழில் நுட்பம்தான். அது இருந்தால், பணம் பூராவையும் சர்க்கார் கொடுக்கும் அளவுக்கு

a Printed as Appendix XI on pages 873–953 infra.